**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - 2022**

------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு

அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 11 ஆவது பிரிவு மற்றும் 2019 யூலை 29 ஆம் திகதிய இலக்கம் 04/2019 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக் | நிதி அமைச்சரின் அங்கீகாரம் இன்றி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,084,930 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது . | ஊழியர் அபிவிருத்தி நிதியம் மற்றும் ஊழியர் பாதுகாப்பு வைப்பு, நிலையான வைப்பு கணக்கை பேணிச் செல்வதற்காக மிகையான பணம் முதலீடு செய்யப்படுவதில்லை. அதற்கு மேலதிகமாக 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான நல்லாளுகை வழிகாட்டியின் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வு சுற்றறிக்கை கடிதம் | | படி மிகைப் பணம் முதலீடு செய்யும் அதிகாரம் அந்த நிறுவனங்களின் முதலீட்டுக் குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் 5 ஆவது அத்தியாயத்தில் 07 ஆம் பிரிவு மற்றும் 2018 திசெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 2/2018 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | 21 பல்கலைக் கழகங்களில் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவி அணியினரில் 514 பேர்களில் பிணை முறிகளை மீறியதன் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,317 மில்லியன் அறவிடவேண்டிக் காணப்பட்டது. | உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை கடிதத்தின் மூலம் உயர் கல்வி நிறுவனங்களில் பிணை முறிகளை பணமாக்கிக் கொள்வதற்கு மீளாய்வுக் குழு தாபிப்பதற்கு, அவற்றின் வழிகாட்டலில் அறிமுகப்படுத்தல் மற்றும் பிணைமுறி மீதி, பிணையாளர்களின் விபரங்கள் என்பவற்றை இணையதளத்தில் பிரசுரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2022.12.31 இல் உள்ளவாறு பிணைமுறிகளை மீறிய 533 பேர் மற்றும் ஆண்டின் போது அறவிடப்பட்ட பிணைமுறி மீறல்கள் 84 கும். | உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவைப் பணம் அறவிடப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 282,613,533 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 47,293,185 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 329,906,718 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்சிக்கு மூலதன மானியம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆண்டின் போது மாதாந்த வாடகை ரூபா 350,000 இற்கு பெறப்பட்டிருந்த 3,337 சதுர அடி அளவான கட்டிடத்தில் இட அளவு போதிய அளவில் இல்லாமை மற்றும் போக்குவரத்து வசதியின்மை காணப்பட்டதன் அடிப்படையில் அந்த குத்தகை உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு 7,000 சதுர அடி கட்டிடமொன்று ரூபா 950,000 மாதாந்த வாடகையில் பெற்றுக் கொள்வதற்காக தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும் அந்த அங்கீகாரத்துக்கு முரணாக மாதாந்த வாடகை ரூபா 350,000 ஆன வாடகை உடன்படிக்கை இரத்து செய்யப்படாமல் புதிய கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 4,200,000 மேலதிக கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. | வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 3337 சதுர அடி உடைய கட்டடத்திற்கு உரிய வாடகை உடன்படிக்கை வறிதாக்கப்பட்டு அதில் அமைந்துள்ள பிரிவுகள் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட புதிய கட்டிடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு முடியாமையின் காரணமாக 2023.01.26 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1094 ஆவது கூட்டத்தில் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் காரணங்களை தெளிவுபடுத்தி அரச வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு கடிதம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் கடிதம் 2023.03.14 ஆம் திகதி அரச வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு மிகவும் நலன் வாய்ந்த சிக்கன ரீதியில் தீர்மானம் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் 07 கணனிகளை கொள்வனவு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் இரத்து செய்யப்பட்டு அதற்குப் பதிலாக 04 கணனிகள் வாடகைக்குப் பெற்றதன் | அமைச்சு செயலாளரின் பரிந்துரையின் படி நிதிப் பிரமாணம் 104 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப பரிசோதனையின் பிரகாரம் இந்த 07 கணனிகளும் கொள்வனவு செய்யப்படாமல் | அமைச்சின் பரிசோதனையின் தீர்மாணத்தின் படி நிதிப்பிரமானம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக நிறுவனத்திக்கு நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தமை தொடர்பாக அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் நிதிப்பிரமானம் 104 இன் பிரகாரம் பரிசோதனை செய்ததன் பின்னர் 2022 பெப்ரவரி 03 ஆம் திகதிய அமைச்சுச் செயலாளரின் கடிதம் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமானம் 104 இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 04 கணனிகள் அந்தச் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட தேவையின் பிரகாரம் வாடகைக்கு எடுத்தல் தொடர்பாக 373 ஆவது முகாமைத்துவ குழுவின் போதும், 1086 ஆவது ஆணைக்குழு கூட்டத் தடவையின் போதும் ஆழமாக ஆய்வு செய்யப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தற்போது அமைச்சுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020/2021 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்ளீர்த்தல் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் காணப்படுகின்ற 3,008 வெற்றிடங்களை பூர்த்தி செய்யாமையின் காரணமாக மாணவர்களுக்கு பல்கலைக்கழக நுழைவு இழக்கப்படுவதை குறைப்பதற்காக புதிய திட்ட முறைமை ஒன்று ஆணைக்குழு தயாரித்திருக்கவில்லை. | தற்போது 2020/2021 கல்வியாண்டிற்காக வெற்றிடங்கள் 04 தடவைகள் அளவில் நிரப்பி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | வெற்றிடமான அளவைக் குறைத்து ஆகக் கூடிய அளவில் மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் நுழைவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டடின் போது அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த பல்கழைக்கழக நுழைவு | 39 கல்விசார் பாடநெறிகளுக்காக Z – பெறுமதி பூர்த்தி செய்துகொள்வதற்கு | இது தொடர்பாக மாணவர்களுக்கு நியாயம் ஒன்றை வழங்கும் வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்கைளுக்குப் புறம்பாக அரசாங்கப் பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் 38 பாடநெறிகளுக்கு மாணவர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்கு மீண்டும் தகுதிகாண் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 08 ஆம் திகதிய பொது முயற்சிகள் குழு தீர்மானத்தின் பிரகாரம் தகுதி காண் பரீட்சைகள் நடாத்துவதில் நியாயம் மற்றதாக இருந்ததாக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 38 பாடநெறிகளில் 18 பாடநெறிகள் தொடர்ந்தும் தகுதிகாண் பரீட்சைகளில் பெறுபேறுகள் அடிப்படையில் மாணவர்கள் உள்ளடக்கிக் கொள்வதற்கு 2021/2022 கல்வியாண்டின் போதும் திட்டமிடப்பட்டிருந்தது. | மேலதிமாக பிரயோக / தகுதிகாண் பரீட்சைகள் சித்தியடைதல் கட்டாயமாகும். 21 பாடநெறிகளுக்காக பிரயோக/தகுதிகாண் பரீட்சைகள் சித்தியடைவதன் தேவை இல்லாதிருந்த போதிலும் பாடநெறிகளுக்காக நுழைவினை வழங்குவதற்கு பூர்த்தி செய்யப்படவேண்டிய ஆகக் குறைந்த தகைமைகளின் மாற்றங்களுடன் 2023/2024 கல்வியாண்டு முதல் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். | இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாலின மற்றும் சமூகமயப்படுத்தலின் சமத்துவம்/நியாயத்தன்மை தொடர்பான செயற்திட்டத்தின் செலவினத்திற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது கிடைக்கப் பெற்ற ரூபா 9,127,804 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து குறைவாகக் பயன்படுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டு மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சுகாதார உத்தியோகத்தர்களை பயிற்சியளிப்பதற்காக சுகாதார அமைச்சில் இருந்து ரூபா 12,681,589 வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய பணிகள் நிறைவடைந்த பின்னர் சேமிக்கப்பட்ட ரூபா 4,918,087 தொகை 02 வருட அளவிலான காலத்தில் இருந்து தீர்த்துவைக்கப்படாமல் ஆணைக்குழுவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | பதிவு செய்த மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக அமைச்சில் இருந்து கிடைத்த பணத்தில் சகல செலவினங்களும் தீர்க்கப்பட்ட பின்னர் சேமிப்புக்கள் நிகழ்ச்சிதிட்ட முகாமைத்துவத்திற்கு உரிய கொடுப்பனவாகக் கருதி அந்த தொகை ஆணைக்குழுவின் செலவினங்களைச் செய்வதற்காக ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது மென்பொருள் அபிவிருத்திக்காக ரூபா 1,413,500 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய பணிகளை பூர்த்தி செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணிகள் முடிவடைந்ததன் பின்னர் நடைமுறை வேலை கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதியை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பணிகளை விரைவாகப் பூர்த்தி செய்து மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற தீர்த்துவைக்கப்படாத ஒப்பந்த நிறுத்தி வைத்தல்களில் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,291,916 மீதி காணப்பட்டது. | ரூபா 171,247 நிறுத்தி வைத்தல்களில் ரூபா 46,731 தொகை விடுவிப்பதற்கு பொறியியலாளர் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மிகுதி தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | கலாவதியான நிறுத்தல் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கல்விசாரா பதவியணியினருக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் அறிக்கை திகதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | கல்விசாரா பதவியணியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளைத் தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பமொன்று கோரி 2023 மார்ச் 23 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகரித்து பதவியணியனர் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |